Register No. | | | | | | | | |

# TA5A

5153–22

(For the candidates admitted from 2017–2018 onwards)

LL.B DEGREE (SEMESTER) EXAMINATIONS, JUNE 2022.

(Three-year Regular Course)

Third Year – Fifth Semester

CIVIL PROCEDURE CODE

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
07 SEP 2022
LIBRARY

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. The law of limitation generally bars the remedy, but does not destroy right – Discuss.

   காலவரம்பு சட்டம் பொதுவாக தீர்வழியை தடுக்கிறதே தவிர உரிமையை அழிப்பதில்லை – விவாதிக்கவும்.

2. "When once time has began to run no subsequent disability or inability to sue stops it" – Explain.

   "ஒரு முறை காலம் ஓடத் தொடங்கிவிட்டால் அதன் பிறகு வழக்கு தொடர ஏற்படும் குறைபாடு அல்லது இயலாமை என்பது அதனை நிறுத்த இயலாது" – விளக்கவும்.

3. Enumerate the essential requisites of pleadings and describe the manner for amending pleadings.

   வாதுரையின் முக்கிய கூறுகளை தொகுக்கவும். மேலும் வாதுரையில் திருத்துவதற்கான முறைகளை விவரி.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. What is Res-Judicata? What are the conditions for its applications?

   முன் தீர்ப்பு தடை என்றால் என்ன? இக்கோட்பாடு பொருந்தி அமைவதற்கான நிபந்தனைகள் யாவை?

5. Who is an indigent person? Explain the procedure for filing a suit by such a person.

ஏழ்மை நிலையர் என்பவர் யார்? அத்தகையவர்கள் உரிமையியல் வழக்கு தொடர பின்பற்ற வேண்டிய நடைமுறை விதிகளை விளக்குக.

6. What are the powers of the appellate court in hearing appeal?

மேல் முறையீட்டை விசாரணை செய்யும் பொழுது மேல் முறையீட்டு நீதிமன்றத்திற்கான அதிகாரங்களை கூறுக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Ex-Parte decree

ஒரு தலைபட்ச தீர்ப்பாணை

(b) Suit against Government

அரசுக்கு எதிரான வழக்கு

(c) Interim Injunction

இடைகால தடையுத்தரவு

(d) Executing Court

நிறைவேற்றும் நீதிமன்றம்

(e) Review

மறு ஆய்வு

(f) Judgement

தீர்ப்பு

(g) Fraud and Mistake under Limitation Act.

காலவரையறைச் சட்டத்தின் கீழ் மோசடி மற்றும் தவறுகை

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons :

பின்வருவனவற்றுள் இரண்டிற்குச் சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. Vandhiyan agreed to sell his house to Rajarajan for Rs. 10,00,000 and an advance of Rs. 2,00,000 was paid by Rajarajan the agreement was not registered. Now Vandhiyan intends to sell the house to one Mr. Adhityan for a higher price. What is the remedy open to Rajarajan against Vandhiyan.

திரு. வந்தியன் என்பவர் திரு. ராஜராஜன் என்பவருக்கு தன்னுடைய வீட்டை ரூ. 10,00,000–க்கு விற்பனை செய்ய ஒப்பு கொண்டதால், அதற்க்கான ராஜராஜன் என்பவர் முன் பணமாக ரூ. 2,00,000 கொடுத்தார் பதிவு செய்யப்படாத விற்பனை ஒப்பந்தம் எழுதப்பட்டது தற்பொழுது வந்தியன் தனது அந்த வீட்டை ஆதித்யருக்கு அதிக விலைக்கு விற்பனை செய்ய விரும்புகிறார். ராஜராஜன்க்கு உள்ள உரிமையியல் பரிகாரம் வந்தியனுக்கு எதிராக என்ன உள்ளது.

9. Vidhya sold her goods through her agent and the agent kept the sale proceeds in her hands. Divya obtained a decree against Vidhya and attaches the sale proceeds in the hand of her agent. Whether the attachment is valid?

   வித்யா தனது பொருட்களை அவரது முகவர் மூலமாக விற்பனை செய்கிறார். விற்பனை பணத்தை முகவர் தன் வசம் வைத்துக் கொண்டுள்ளார். திவ்யா என்பவர் வித்யாவுக்கு எதிராக தீர்ப்பாணை பெற்று முகவர் வசமுள்ள விற்பனை பணத்தை பற்றுகை செய்கிறார். அந்த பற்றுகை செல்லுபடியாகுமா?

10. Anju published defamatory statement against Manju. Hence Manju filed defamation suit against Anju for claiming compensation. Anju died leaving her son Aravindh as her legal heir. Whether the suit will continue against Aravindh.

    அஞ்சு என்பவர் மஞ்சுக்கு எதிராக சில அவதூறு செய்திகளை வெளியிடுகிறார். எனவே மஞ்சு என்பவர் அஞ்சு–விற்கு எதிராக நஷ்ட ஈடு கோரி அவதூறு வழக்கு தாக்கல் செய்கிறார். அதன்பின் அரவிந்த் என்பவர் வாரிசாக விட்டுவிட்டு அஞ்சு இறந்துவிடுகிறார். மஞ்சுவின் அந்த அவதூறு வழக்கு அரவிந்திற்கு எதிராக தொடர்ந்து நீடிக்குமா?

---

Register No. | | | | | | | | |

**TA5B** 5154–22

(For the candidates admitted from 2017–2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, JUNE 2022.

(Three – year Regular Course)

Third Year – Fifth Semester

CRIMINAL PROCEDURE CODE

GOVERNMENT LAW COLLEGE, TRICHY 07 SEP 2022 LIBRARY

Time : 2½ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. What is the procedure in commencement of proceedings before a Magistrate :

   (a) On receipt of complaints

   (b) On receipt of police report.

   ஒரு நீதித்துறை நடுவர், வழக்கு விசாரணையை தொடங்குவதற்கான நடைமுறைகள் யாவை :

   (அ) குற்றமுறையீட்டின் பேரிலும்

   (ஆ) காவல்துறை அறிக்கையின் பேரிலும்.

2. What is the procedure of appointing a commission by a criminal court and for what purpose commission is appointed?

   ஒரு குற்றவியல் நீதிமன்றத்தால் ஆணையம் அமைக்கப்படுவதற்கான நடைமுறைகள் யாவை மற்றும் என்ன நோக்கங்களுக்காக ஆணையம் அமைக்கப்படலாம்?

3. Explain about the rule making and inherent powers of High Court, in respect of Criminal Courts.

   குற்றவியல் நீதிமன்றங்களைப் பொறுத்தவரையில் உயர்நீதிமன்றத்திற்குள்ள விதிகள் உருவாக்கக்கூடிய மற்றும் உள்ளார்ந்த அதிகாரங்கள் பற்றி விவரிக்க.

## PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. What is meant by the term "Judgment"? Explain the essentials of a valid judgment.

   "தீர்ப்பு" என்றால் என்ன? ஒரு செல்லத்தக்க தீர்ப்பின் முக்கியக் கூறுகளை விவரிக்க.

5. Juvenile Justice Board is the key of the Juvenile Justice Act – Comment.

   இளஞ்சிறார் நீதிக் குழுமமானது, இளஞ்சிறார் நீதிமுறைச் சட்டத்திற்கான திறவுகோல் ஆகும். கருத்துரைக்க.

6. Explain the advantages of the probation system with particular reference to the Probation of Offenders Act, 1958.

   நன்னடத்தை கண்காணிப்பு விடுதலை முறையை, 1958-ம் ஆண்டின் குற்றவாளிகள் நன்னடத்தை கண்காணிப்பு விடுதலைச் சட்டத்தை குறித்துரைத்து, அதன் நன்மைகளை விவரிக்க.

## PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

   பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக.

   (a) Evidentiary value of FIR.

   முதல் தகவல் அறிக்கையின் சாட்சிய மதிப்பு.

   (b) Parents right to maintenance.

   பெற்றோருக்கான பராமரிப்பு உரிமை.

   (c) Recording of confession.

   குற்றஏற்புரை பதிவு.

   (d) Court of Sessions.

   அமர்வு நீதிமன்றம்.

   (e) Complaint.

   குற்றமுறையீடு.

   (f) Origin of Juvenile Justice.

   இளஞ்சிறார் நீதிமுறையின் தோற்றம்.

   (g) First Offender.

   முதன்முறை குற்றவாளி.

## PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. "A" was sentenced by a high court in an extraordinary original jurisdication to undergo six months imprisonment. "A" wants to file an appeal before the Supreme Court. Advise him.

   ஓர் உயர்நீதிமன்றம் தனது அசாதாரண அசல் அதிகார வரம்பை பயன்படுத்தி, "அ" என்பவருக்கு ஆறுமாத கால சிறைத் தண்டணை விதிக்கின்றது. இதை எதிர்த்து "அ" உச்சநீதிமன்றத்திற்கு மேல்முறையீடு செய்ய விரும்புகிறார். ஆலோசனை வழங்குக.

9. An accused person "A" has absconded, and that there is no immediate prosepct of arresting him. The competent court to try such person, has examined the prosecution witness and recorded their depositions, in his absence. Decide the validity of that witness examination.

   "அ" என்ற தேடப்படும் குற்றவாளியை, உடனடியாக கைது செய்ய வாய்ப்பில்லை எனும் சூழ்நிலையில், அவரை விசாரிக்க தகுந்த நீதிமன்றம், அவர் இல்லாமலேயே அவ்வழக்கின் அரசு தரப்பு சாட்சிகளை விசாரித்து, அவர்களின் சாட்சியத்தையும் பதிவு செய்கின்றது. இந்த சாட்சிய விசாரணையின் செல்லும் தன்மையை தீர்மானிக்க.

10. A judicial magistrate attached the properties of an accused person simultaneous to issuance of an arrest warrant. Is this order valid.

    ஒரு நீதித்துறை நடவர், ஒரு வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட நபரான "அ" என்பவரை கைது செய்து, அவரது சொத்துக்களையும் பறிமுதல் செய்யும்படி ஆணை பிறப்பிக்கிறார். அந்த ஆணை செல்லுமா?

———

Register No. [ ]

**TA5C**

**5155–22**

(For the candidates admitted from 2017–2018 onwards)

LL.B DEGREE (SEMESTER) EXAMINATIONS, JUNE 2022.

(Three-year Regular Course)

Third Year – Fifth Semester

ENVIRONMENTAL LAW

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
07 SEP 2022
LIBRARY

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Describe the various legal provisions in criminal law regarding abatement of nuisance.

   தொல்லை அகற்றல் தொடர்பாக குற்றவியல் சட்டத்திலுள்ள பல்வேறு சட்ட பிரிவுகளை விவரிக்கவும்.

2. Examine the contributions of social movements in environmental protection.

   சுற்றுப்புறச்சூழல் பாதுகாப்பு குறித்த சமுதாய இயக்கங்களின் பங்கினை ஆராய்க.

3. Examine the laws relating to the protection and welfare of animals including wild animals.

   வனவிலங்குகள் உள்ளிட்ட விலங்குகளின் பாதுகாப்பு மற்றும் நலன் குறித்த சட்டங்களை – விவரிக்கவும்.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the procedures established for disposing e-wastes in India.

   இந்தியாவில் இ-கழிவுகளை அப்புறப்படுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள நடைமுறைகளை விவரிக்க.

5. Trace the evolution of environmental jurisprudence through the decisions of the Supreme Court.

   உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புகள் மூலமாக சுற்றுப்புறச்சூழல் சட்டவியலின் தோற்றத்தினை ஆராய்க.

6. Analyse the powers and functions of the Central Pollution Control Board under the Air Act 1981.

காற்றுச் சட்டம் 1981 கீழ் அமைக்கப்பட்டுள்ள மத்திய மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் அதிகாரம் மற்றும் பணிகளைப் பகுப்பாய்வு செய்க.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Biological diversity

பல்லுயிர் பெருக்கம்

(b) Narmadha Bachao Andolan

நர்மதா பச்சாவோ ஆந்தோலன்

(c) Land Pollution

நில மாசு

(d) Nairobi Declaration

நைரோபி விளம்புகை

(e) National Park

தேசியப் பூங்கா

(f) Bio-medical waste

உயிரியல் மருத்துவக்கழிவு

(g) Performing Animals

கேளிக்கைக்குரிய விலங்குகள்

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும் :

8. The National Green Tribunal banned sand mining from river beds for those mining carried out without environmental clearance. An appeal was filed before the Supreme Court against the decision of the tribunal – Decide.

தேசிய சுற்றுப்புற சூழல் தீர்ப்பாயம் சுற்றுச்சூழல் இசைவு பெறாதவர்கள் ஆற்று மணல் படுக்கைகளில் மணல் அள்ளுவதற்கு தடை விதித்தது. தீர்பாயத்தின் முடிவை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது — தீர்மானிக்கவும்.

9. Fishermen were imposed a ban to fish during breeding season. The fishermen filed a case an the ground that their fundamental right is threatened – Decide.

மீன் இனப்பெருக்க காலங்களில் மீன் பிடிப்பது தடை செய்யப்பட்டது. இது தங்கள் அடிப்படை உரிமைகளை அச்சுறுத்துவதாக இருப்பதாக மீனவர்கள் வழக்கு ஒன்றை தொடுத்தனர். தீர்மானிக்கவும்.

10. A Sugar factory let out trade effluents into the river. As a result the river water became polluted and gravely affected its quality. The nearby residents filed a case to close the sugar factory – Decide.

சர்க்கரை ஆக்கத் தொழிலகம் திடக் கழிவுகளை ஆற்றில் விட்டதால் ஆற்று நீர் மாசடைந்ததுடன் அதன் தூயதன்மையும் பாதிக்கப்பட்டது. அருகாமையில் இருக்கும் உள்ளூர் மக்கள் சர்க்கரை ஆலையை மூட வேண்டும என்று வழக்கிட்டனர். தீர்மானிக்கவும்.

---

Register No. | | | | | | | | |

# TA5D

5250–22

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, JUNE 2022.

(Three–year Regular Course)

Third Year – Fifth Semester

LABOUR LAW – II

GOVERNMENT LAW COLLEGE, TRICHY 07 SEP 2022 LIBRARY

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Define 'Bonus'. Explain the calculation of Bonus as per full bench formula.

   'மீதூதியம்' - வரையறு. முழு அமர்வு விதியின் கீழ் எவ்வாறு மீதூதியம் கணக்கிடப்படுகிறது.

2. Explain the provisions of the Factories Act 1948 relating to working hours and leave of the workers.

   தொழிற்சாலைகள் சட்டம் 1948ல் உள்ள தொழிலாளர்களின் பணி நேரம் மற்றும் விடுப்பு குறித்த சரத்துகளை விவரி.

3. Discuss the provisions of the ESI Act 1948 relating to the adjudication of disputes and claims.

   தொழிலாளர் அரசு காப்பீடு சட்டம் 1948ல் உள்ள தகராறுகள் மற்றும் கோரிக்கைகளை நீதிமன்ற முறையிலான தீர்விற்கான வகையங்களை விவாதிக்கவும்.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Describe the provisions of the Tamil Nadu Shops and Establishments Act 1947 on employment of children and young persons.

   1947ம் ஆண்டின் தமிழ்நாடு கடைகள் மற்றும் வணிக நிறுவனங்கள் சட்டத்தில் குழந்தைகள் மற்றும் இளம் நபர்கள் பணியமர்த்தல் தொடர்பான வகையங்களை விவரிக்கவும்.

5. State the benefits available under the Employees, State Insurance Act, 1948.

தொழிலாளர் அரசு காப்பீடு சட்டம் 1948ன் கீழ் கிடைக்க கூடிய பலன்களை எடுத்து கூறுக.

6. Explain the benefits 'available to a pregnant woman under the Maternity Benefits Act 1961.

1961 ஆம் ஆண்டு மகப்பேறுகாலப் பலன்கள் சட்டத்தில் ஒரு கர்ப்பிணிய பெண்ணிற்கு கிடைக்கக் கூடிய சலுகைகள் யாவை என்று விளக்குக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Manufacturing process

உற்பத்தி முறை

(b) Occupational Disease

தொழிற்சார்ந்த நோய்

(c) Rate of Gratuity

பணிக்கொடையின் அளவு

(d) Employees Provident Fund

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி.

(e) Voluntary coverage

தன்விருப்ப துழாவுகை

(f) Social Insurance

சமூக காப்பீடு

(g) Objectives of social security laws.

சமூக பாதுகாப்புச் சட்டங்களின் நோக்கங்கள்.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'X' is employed in a factory as manager. He is charged for an act of mis appropriation and dismissed from service for proved misconducts, after seven years of service. His last drawn wages is Rs. 20,000/- He claimed gratuity. Decide his claim.

'X' என்பவர் ஒரு தொழிற்சாலையில் மேலாளராக பணிபுரிகின்றார். அவர் கையாடல் குற்றத்திற்காக குற்றம் சாட்டப்பட்டு, நிரூபிக்கப்பட்ட குற்றச்சாட்டிற்காக ஏழு ஆண்டுகள் பணிக்கு பிறகு நிரந்தர பணி நீக்கம் தண்டனையாக விதிக்கப்படுகின்றார். அவர் பெற்ற கடைசி சம்பளம் ரூ. 20,000 ஆகும். அவர் பணிக்கொடை கோருகின்றார். அவருடைய கோரிக்கையினை முடிவு காண்க.

9. A workman while performing his duties willfully neglected to use the safety devices provided by the employer and met with an accident and lost his legs. He claimed compensation from his employer, decide.

ஒரு தொழிலாளர் தனக்கு வேலையளிப்பவரால் வழங்கப்பட்ட பாதுகாப்பு சாதனங்களை வேண்டுமென்றே பயன்படுத்தவில்லை, அதன் காரணமாக விபத்து ஏற்பட்டு தன்னுடைய கால்களை இழந்து விடுகின்றார். அத்தொழிலாளி தன்னுடைய வேலை அளிப்பவரிடம் இழப்பீடு கோருகின்றார், முடிவு காண்க.

10. Sethu joined service on 1.5.2018. His 1.10.2021drawn wages was Rs. 26,000/- He died due to heart attack on 1.10.2021, while working in the factory. His Legal heirs claimed gratuity. Decide and calculate the gratuity, if eligible.

சேது 1.5.2018ல் பணிக்கு சேருகின்றார். அவர் கடைசியாக பெற்ற சம்பளம் ரூ. 26,000. அவர் பணி செய்து கொண்டு இருக்கும் போது மாரடைப்பால் 1.10.2021 அன்று இறந்து விடுகின்றார், அவருடைய சட்டப்படியான வாரிசுகள் பணிக்கொடை கோருகின்றனர். முடிவு காண்க, தகுதியிருப்பின் கணக்கீடு செய்க.

———————

Register No. | | | | | | | | |

**TA5E** **5156–22**

(For the candidates admitted from 2017-2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, JUNE 2022.

(Three-year Regular Course)

Third Year – Fifth Semester

LAW OF TAXATION

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
07 SEP 2022
LIBRARY

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Define 'Tax' – Explain advantages and disadvantages of direct and indirect taxes.

   வரி என்பதை வரையறு. நேர்முக வரிவிதிப்பு மற்றும் மறைமுக வரி விதிப்பு குறித்த நன்மை தீமைகளை விளக்குக.

2. Explain in detail about tax incidence on residential status of an individual in India.

   இந்தியாவில் தனிநபர் குடியிருப்பு நிலையின் வரிவிதிப்பு முறை குறித்து விளக்கமாக விவரிக்கவும்.

3. Discuss the constitutional validity of the Central Goods and Services Tax Act, 2017 introduced in India.

   இந்தியாவில் சரக்கு மற்றும் சேவை வரி சட்டம் 2017 அறிமுகப்படுத்தப்பட்டதன் அரசமைப்பு, செல்லுந் தன்மையை விவாதிக்க.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Define income and enumerate those incomes which do not form part of the total income of an Assessee?

   வருமானம் என்ற வார்த்தையினை வரையறுத்து வரி செலுத்துபவரின் வருமானத்தில் எந்த வருமானம் சேராது என்பதை பட்டியலிட்டு விளக்கவும்.

5. Define 'Assessment' and describe the various assessment procedure under the TNGST Act 2017.

'மதிப்பீட்டினை' வரையறுத்து, தமிழ்நாடு சரக்கு மற்றும் சேவை வரிச்சட்டம் 2017ன் கீழ் வரி மதிப்பீட்டு முறை பற்றி விளக்கவும்.

6. Examine the constitutional provisions relating to taxing policies.

வரிவிதிப்பு கொள்கை குறித்த அரசமைப்பு சட்ட வகையங்களை ஆராய்க.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக :

(a) Customs clearance
சுங்கவரித் தீர்வை

(b) Income from House property
வீட்டுச் சொத்திலிருந்து கிடைக்கும் வருமானம்

(c) Capital gains
மூலதன ஆதாயம்

(d) Exemption from customs duty
சுங்கவரி விலக்கு

(e) Integrated Goods and Services Tax (IGST)
ஒருங்கிணைந்த சரக்கு மற்றும் சேவை வரி

(f) Valuation of goods
பொருட்களின் மதிப்பீடு

(g) Deduction from Business income
வியாபார வருமானத்திலிருந்து கழிவு

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of Law. Give cogent reasons :

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்களைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. Mrs. Madhu is working as Teacher in Vellore. Her Monthly income and deductions are as follows :

| Income | | Deduction | |
|---|---|---|---|
| Basic pay | 35,000 | CPS | 3,900 |
| DA | 25,000 | SPF | 70 |
| HRA | 5,000 | NHIS | 180 |
| MA | 300 | | |
| | 65,300 | | 4,150 |

She pays a house rent of Rs. 7,000 per month. She pays Rs. 2,000 per half-yearly for LIC policy premium. Calculate tax liability for the assessment year 2022-23.

திருமதி மது ஆசிரியராக வேலூரில் பணிபுரிந்து வருகிறார். அவருடைய வருமானம் மற்றும் பிடித்தம் பின்வருமாறு :

| வருமானம் | | பிடித்தம் | |
|---|---|---|---|
| அடிப்படை சம்பளம் | 35,000 | ஓய்வூதியத் திட்டம் | 3,900 |
| அகவிலைப்படி | 25,000 | சிறப்பு சேமநல நிதி | 70 |
| வீட்டுப்படி | 5,000 | புதிய மருத்துவ நலத்திட்டம் | 180 |
| மருத்துவ படி | 300 | | |
| | 65,300 | | 4,150 |

அவர் வீட்டு வாடகையாக மாதம் 7,000 செலுத்துகிறார். ஆயுள் காப்பீட்டு கழகத்திற்கு ரூ. 2,000 அரையாண்டிற்கு ஒருமுறை செலுத்துகிறார். வரிவிதிப்பு ஆண்டு 2022-23க்கு அவர் செலுத்த வேண்டிய வரியினை கணக்கிடுக.

9. Mrs. Daisy Rani earned Rs. 17,60,000 - per annum as Income from business and Rs. 2,00,000 from House property. Determine her tax liability for the assessment year 2022-23.

திருமதி. டெய்ஸி ராணி வியாபாரத்திலிருந்து வருடத்திற்கு ரூ. 17,60,000மும், வீட்டு சொத்திலிருந்து ரூ. 2,00,000 வாடகை வருமானமும் ஈட்டியுள்ளார். எனில் அவருடைய வரி செலுத்து விகிதத்தினை கண்டறியவும்.

10. Mrs. Vimala purchased a house for Rs. 40,00,000 in the year 2018-2019 and sells the house in 2020-2021 for Rs. 85,00,000. She spends Rs. 5,00,000 for raising compound wall. Calculate taxable capital gain under Income Tax Act 1961.

2018-2019 ஆண்டு திருமதி விமலா ரூ. 40,00,000திற்கு ஒரு வீட்டை வாங்கி 2020-2021 ஆம் ஆண்டு ரூ. 85,00,000க்கு விற்றுவிட்டார். மேலும் ரூ. 5,00,000 தனது வீட்டின் சுற்று சுவர் எழுப்ப செலவு செய்துள்ளார். வருமானவரிச் சட்டம் 1961ன் கீழ் வரிவிதிக்க கூடிய மூலதன ஆதாயத்தை கணக்கிடுக.

————